**அகெடமி ஒவ் பினான்சியல் ஸ்ரடீஸ் (பிணையால்) வரையறுக்கப்பட்ட கம்பனி- 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

அகெடமி ஒவ் பினான்சியல் ஸ்ரடீஸ் (பிணையால்) வரையறுக்கப்பட்ட கம்பனியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை.

| விடயம் | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் கீழ் வருகின்ற மிலோதா நிறுவனம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் நியமிக்கப்படல் | அமைச்சரவை விஞ்ஞாபனம் அல்லது அமைச்சரவை தீர்மானம். | அமைச்சரவைப் பத்திரம் எமக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை | அமைச்சரவை விஞ்ஞாபனம் அல்லது தீர்மானமொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏனைய பெற வேண்டிய மிகுதியில் அடங்கியுள்ள 04 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 442,650 ஆன முற்பணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையில் தீர்க்கப்படாதிருந்ததுடன் தீர்க்கப்படாத காலம் 08 நாட்கள் முதல் 03 மாதங்கள் வரையாக இருந்தது. | நிலுவையாகவிருந்த முற்பணங்களுக்கான செலவுகளை அங்கீகரித்தல் மற்றும் வங்கியில் இடல் நிலவிய கொரோனா தொற்று நோய் நிலைமையினால் தாமதமடைந்தது. | பெறப்பட்ட முற்பணங்கள் வருட இறுதியில் தீர்க்கப்படல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

| | சட்டங்கள் விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) பிரிவு | மீளாய்வாண்டில் கம்பனிக்காக உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கை எதிர்காலத்தில் எடுக்கப்படும். | உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் விரைவில் நியமிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அமைப்பு அகவிதியின் 2(8) ஆம் பிரிவு | ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கான புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் அறிக்கைகளை அச்சிடுவதற்கு கம்பனியால் மீளாய்வாண்டில் நடவடிக்கைகள் எடுக்கப்படாததுடன் கடந்த வருடத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தமைக்கான தகவல்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்காக முறையான முறையொன்றை நடைமுறைப்படுத்துவதில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | சட்டங்கள் விதிகள் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2003 யூன் 02 ஆம் PED/12 ஆம் திகதிய இலக்க பொது முயற்சிகள் நல்லாளுகை தொடர்பான சுற்றறிக்கை | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (i) | 6.5.3 ஆம் பந்தி | 2018 மற்றும் 2019 ஆம் வருடங்களுக்கான வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| | (ii) | 9.2 ஆம் பந்தி | கம்பனியின் ஒருங்கிணைந்த திட்டத்தில் மனிதவளத் தேவைப்பாடுகள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிராததுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு ஒத்ததாக கம்பனியின் அமைப்பு வரைபடமும் தயாரிக்கப்பட்டிராததுடன் அமைப்பு வரைபடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி பொது முயற்சிகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (iii) | 9.3 ஆம் பந்தி | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறையொன்று கம்பனியில் காணப்பட்டிருக்கவில்லை. | முறையான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைகளை விரிவாகத் தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| | (iv) | 9.3.1 இன் (vii) ஆம் பந்தி | பதில் கடமை பதவியொன்றுக்காக அதிகாரியொருவர் நியமிக்கப்பட முடியுமான அதிகபட்ச காலம் 03 மாதங்கள் என்ற போதிலும் கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரி பதவிக்காக வருடத்திற்கு கிட்டிய காலமொன்றாக பதிற் கடமைக்காக அதிகாரியொருவர் நியமிக்கபபட்டிருந்ததுடன் குறித்த பதவி நிரந்தர அடிப்படையில் நிரப்பப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சு மாற்றத்தின் பின்னர் முகாமைத்துவ அமைப்பு மாறும் வரை குறித்த கால நீடிப்புடன் நியமிக்கப்பட்டிருந்தார். | - மேற்படி - |
| | (v) | 7.4.1 | மீளாய்வாண்டில் கம்பனியின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவிலலை. | தேவையான நடவக்கைகள் எதிர்காலத்தில் தேவைப்படும். | - மேற்படி - |
| (ஈ) | அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (ஆ), (இ) மற்றும் 4.2.2 (அ) பிரிவு | | மீளாய்வாண்டில் பெறுகை காலக் குறிப்பொன்று மற்றும் பெறுகை தொடங்கும் சந்தர்ப்பத்திலிருந்து முடிவடையும் வரையான ஒவ்வொரு பெறுகை படிகளையும் விவரிக்கும் | கொவிட் தொற்று நோய் நிலைமையினால் முறையாகப் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு | - மேற்படி - |

கால வரிசைப் பதிவேடொன்று முடியாதிருந்தது.
தயாரிக்கப்பட்டிருக்கவில்லை
என்பதுடன் மீளாய்வாண்டில்
பெறுகைகளுக்காக
ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 55,765,000
ஆன முழுமையான ஒதுக்கங்களும்
பயன்படுத்தப்பபட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,464,804 ஆன இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கொத்த முன்னைய வருடத்தின் இலாபம் ரூபா 29,261,883 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 27,797,079 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது இப் பின்னடைவிற்கு விற்பனை வருமானம் 70 சதவீதத்தினால் குறைவடைந்தமையே பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய வருடத்தின் மற்றும் மீளாய்வாண்டில் கட்டிடங்கள் திருத்தச் செலவுகள் முறையே ரூபா 21,517,072 மற்றும் ரூபா 4,644,554 என்பதுடன் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அச்செலவுகள் 78.41 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தன. அத்துடன் முன்னைய வருடத்தின் மற்றும் மீளாய்வாண்டின் உபகரண திருத்தச் செலவுகள் முறையே ரூபா 1,634,962 மற்றும் ரூபா 3,204,055 என்பதுடன் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அச் செலவுகள் 95.97 சதவீதத்தால் அதிகரித்திருந்தன.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் மொத்த இலாப விகிதம் மற்றும் தேறிய இலாப விகிதங்கள் முறையே 3.4 சதவீதத்தால் மற்றும் 26.37 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் நடைமுறை விகிதம் 0.47 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அது தொடர்பாக கவனம் கோரப்பட்டு கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் செயற்திறனுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பயிற்சிச் செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான விடயப் பரப்பொன்று தீர்மானிக்கப்பட்டு மற்றும் அதற்கான செயல் நடைமுறை தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | தற்போது சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அங்கீகாரத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது. | பயிற்சிச் செயற்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | கற்கை நெறி அமைப்புக்களில் அக் கற்கை நெறிகளுக்கான விரிவுரையாளர்களைத் தெரிவு செய்தல் முறையான அடிப்படையின்றி தெரிவு | வெளிப்படைத் தன்மையுடன் பணிகள் மேற்கொள்ளப்படும். | விரிவுரையாளர்களைத் தெரிவு செய்தலின் போது முறையான அடிப்படையில் |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | தெரிவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) ஒவ்வொரு கற்கை நெறிகளுக்காகவும் கற்கை நெறிக் கட்டணங்களை நிர்ணயித்தல் அத்துடன் கற்கை நெறிகளை அவ்வப்போது மாற்றுதல் தொடர்பான முடிவுகள் முறையான அடிப்படையில் செயற்படுத்தப்படுவதற்குத் தேவையான முறைமையினை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் நிறுவனத்தால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கற்கை நெறிகளின் கல்வித்திறன் மற்றும் பயிற்சிக் கற்கை நெறிகளுக்கான சந்தை விலை போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும். | முறையான அடிப்படையில் கற்கை நெறிக் கட்டணங்கள் தீர்மானிக்கப்படல் வேண்டும். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் சரியான மனிதவள மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு அதிகாரிகளை ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன் ஒவ்வொரு பதவிக்கும் தேவைக்கேற்றவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியொன்று கம்பனியிடம் காணப்படவில்லை. | தேவையான நடவடிக்கைகள் எதிர் காலத்தில் எடுக்கப்படும். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியொன்று உருவாக்கப்படல் வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 ஒருங்கிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் தயாரிக்கப்பட்டிருந்த ஒருங்கிணைந்த திட்டத்தில் தூர நோக்கு, செயற்பணிக் கூற்றுக்கள், கம்பனிக்குச் சொந்தமான சொத்துக்கள் மற்றும் அமைப்பு வரைபடம், பலம், பலவீனங்கள் மற்றும் சவால்கள் தொடர்பான பகுப்பாய்வு, 03 வருடங்களுக்கான செயற்பாட்டு விளைவுகள் மற்றும் காலப்பகுதிக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளின் முன்னேற்றத்தின் அளவு அத்துடன் அளவிடக் கூடிய செயலாற்றல் குறிகாட்டிகள் (Key Performance Indicahors) என்பன குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கை எதிர்காலத்தில் எடுக்கப்படும். | குறிகாட்டிகள் உள்ளடக்கப்பட்டு ஒருங்கிணைந்த திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |